முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை
அசல் வழக்கு எண் – 107/2018

**வாதி தரப்பு சாட்சி–1 முருகவேல் –** திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 16.06.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி:</u>**

1) வா.சா.ஆ.36 ஆவணம் எதற்காக தாக்கல் செய்தேன் என்றால், பெருமாள் நாயக்கர் பெயரில் சொத்து உள்ளது என காட்ட தாக்கல் செய்தேன். வா.சா.ஆ.36ல் கண்ட சொத்து பெருமாள்நாயக்கருக்கு பாகம் பிரிந்த பின்னிட்டு அவரால் தனிப்பட்ட முறையில் வாங்கப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. வா.சா.ஆ.36ல் கண்ட சொத்தில் எங்களுக்கு எந்த உரிமையும் அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.39ல் கண்ட சொத்தை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். எதனால் சேர்க்கவில்லை என்றால், எனது தகப்பனாரும், கொண்டம்மநாயக்கரும் தனிப்பட்ட முறையில் வாங்கிய சொத்து என்பதால் சேர்க்கவில்லை. பாகம் கோரி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கில் அனைத்து சொத்துக்களையும் சேர்க்காததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

2) வா.சா.ஆ.38 ஆவணத்தில் கொண்டம்மநாயக்கர் தனது மகன் நாகலெட்சுமிக்கு தானசெட்டில்மென்ட் செய்து கொடுத்துள்ள ஆவணத்தில் தனக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டு, வாய்க்கரார் மூலம் பாகம் பிரிந்த சொத்தை தானசெட்டில்மென்ட் செய்வதாக கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.38 ஆவணத்தின்படியே ஏற்கெனவே எனது தகப்பனாருக்கு பாகம் பிரித்துவிட்டது தெரிகிறது என்றும், நான் பாகம் பிரியவில்லை என்று பொய்யாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. பாகப்பிரிவினையை தவறாக செய்துள்ளார்கள். வா.சா.ஆ.40ல் உள்ள சொத்துக்கள் அதன் கிரையதாரர்களால் தனிப்பட்ட முறையில் வாங்கப்பட்டவை என்றால் சரியல்ல, அது கூட்டுக்குடும்ப சொத்தாகும்.

வா.சா.ஆ.40ன் அசல் ஆவணம் எவ்வாறு எனக்கு கிடைத்தது என்றால், நாங்கள் கூட்டுக்குடும்பமாக இருப்பதால் அசல் ஆவணம் என்வசம் உள்ளது.

3) வா.சா.ஆ.40ல் கண்ட சொத்துக்கள் தம்மாநாயக்கர் மனைவி பழனியம்மாள் மற்றும் பெருமாள்நாயக்கர் மனைவி பழனியம்மாளால் அவர்களது சேமிப்பு பணத்தை வைத்து தனிப்பட்ட முறையில் வாங்கப்பட்ட சொத்து என்றும், அவர்களுக்கு தெரியாமல் கிரைய ஆவணத்தை எடுத்து வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. நாங்கள் கூட்டுக்குடும்பமாக இருந்ததாக சொல்லும் சங்கதிகள் பொய் என்றால் சரியல்ல. சர்வே எண் 1192/8ல் 35 செண்ட் நிலத்தை வா.சா.ஆ.40 மூலமாக கிரையம் பெற்றுள்ளார்கள் என்றும், அது அவர்களது தனிப்பட்ட சொத்து என்றும், இதே சர்வே எண்ணில் மீதமுள்ள 1 ஏக்கர் 40 செண்ட், நான்காக பாகம் பிரிக்கப்பட்டு எனக்கு 35 செண்ட் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அவ்வாறு எனக்கு பாகம் பிரிந்த 35 செண்ட்டை நான் தனிப்பட்ட முறையில் அனுபவம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

4) வா.சா.ஆ.37ல் உள்ள ஆவணங்கள் தம்மாநாயக்கர் மகன்கள் பெயரில் தனிப்பட்டாவாக உள்ளதைக் காட்ட தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, எனது பாட்டனார் ரெங்கம்மநாயக்கருக்கு பின்னிட்டு பெருமாள்நாயக்கர் மற்றும் தம்மாநாயக்கர் பெயரில் மட்டும் தவறுதாலாக வந்துவிட்டது என்பதை காட்ட தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது தவறு என்றும், பாகம் பிரிந்த பின்னிட்டு அவரவர் அனுபவத்தில் உள்ள நிலங்களுக்கு அவரவர் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் மூலமாக எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றும், எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**